## IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 73/2020 | Village | : | |
| Prosecution witness | : | PW-25 | Taluk | : | |
| Name | : | திருமதி. கலைகண்ணகி | Occupation | : | |
| Husband Name | : | திரு. ராஜ்குமார் | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 23.9.25.**

A8,10,11 accused absent. U/sec.355 BNSS petition filed and allowed. Others present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் உள்ள தனி விரல் ரேகை கூடத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக விரல்ரேகைபிரிவில் பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் 19.2.2016 to 4.11.2020 வரை தஞ்சாவூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் உள்ள தனி விரல்ரேகை கூடத்தில் காவல் துணை கண்காணிப்பாளராக விரல்ரேகையாக பணியாற்றினேன். அச்சமயம் நடுகாவேரி காவல்நிலைய கு.எண். 90/2019 ச.பி 302 இதச வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் 12.6.2019 சுமார் 11 மணியளவில் தொலைபேசி மூலம் அழைத்ததன் பேரில் குற்றம் நடந்த இடமான பனைவெளி மாரியம்மன்கோவில் எதிர்புறம் வெட்டாற்று கரைக்கு சுமார் 11.45 மணியளவில் சென்று பார்த்தபோது அங்கு அடையாளம் தெரியாது ஆண் பிரேதம் மற்றும் பிளாஸ்டிக் பாட்டில் கண்ணாடி பாட்டில் இவைகள் அங்கிருந்தது. முதலில் அடையாளம் தெரியாத ஆண் பிரேதம் இவற்றிற்கு கைரேகை பதிவு செய்து கொண்டு மேலும் சோதனை மேற்கொண்டபோது அங்கிருந்த பொருட்களில் விரல்ரேகை பதிவுகள் ஏதும் கிடைக்கவில்லை . மண்ணுடன் ஒட்டியிருந்ததால் இதற்கான வாய்ப்புகள் அதிகமாக இல்லை என்பதற்கான முதல் அறிக்கை SOC Report மற்றும் அடையாளம் தெரியாத ஆண் பிரேதத்திலிருந்து எடுக்கபட்ட கைரேகை தாள்

ஆகியவற்றை இணைத்து நடுகாவேரி காவல் ஆய்வாளருக்கு 13.6.2019 அன்று அனுப்பிவைக்கபட்டது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

11.30 மணிக்கு பிரேதம் வெண்ணாற்று கரையில் இருந்ததால் நான் 11.45 க்கு போய் பார்த்தேனா என்றால் ஆமாம்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.